மாண்புமிகு பேரவைத் தலைவர்: நமக்கு மிகத் தெளிவாக இருக்கிறது. (குறுக்கீடு) தயவுசெய்து கேளுங்கள். (குறுக்கீடு) நம்முடைய விதிகளில் மிகத் தெளிவாக இருக்கிறது. எனவே நான் மறுத்த பிரச்சினையை எந்த வகையிலேயும் இங்கே கிளப்பக்கூடாது என்று இருக்கிறபோது மேற்கொண்டு இதிலே விவாதம் வேண்டாம்.

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

திரு. குமரி அனந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். உங்களுக்கு நான் பதில் எழுதி விட்டேன் (குறுக்கீடு) அது பற்றிய ஒரு ஸ்டேட்மென்ட் வைக்க வேண்டும் என்று இருக்கிறது. அந்த ஸ்டேட்மென்ட் இல்லை. உங்களுக்கு நான் எழுதி இருக்கிறேன், அந்த மாதிரி ஒரு ஸ்டேட்மென்ட் கொடுங்கள் என்று. அதற்கு மேலே நான் என்னுடைய முடிவைச் சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், இன்றைக்கு வேண்டாம். (குறுக்கீடு) இன்றைக்கு ஸ்பெஷல் மென்ஷன் ஒன்றும் இல்லை. உங்களுக்கு நான் தெரிவித்திருக்கிறேன். (குறுக்கீடு) அந்த ஒரு டி.எஸ்.பி. இறந்தது பற்றிய பிரச்சினையை நாளைக்கு எடுக்கலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) அது என்ன என்று நீங்கள் தெரிவித்திருந்தால்தானே. (குறுக்கீடு) நீங்கள் பிரிவிலேஜ் மோஷன் ஒன்று கொடுத்து இருக்கிறீர்கள். (குறுக்கீடு) இதிலே வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் என்ன தெரிவிக்கப்போகிறீர்கள் என்று என்னிடத்திலே சொல்லவில்லையே. (குறுக்கீடு) ஸ்பெஷல் மென்ஷன்-ஆக ஏதாவது தெரிவிக்க வேண்டுமென்றால் என்னிடத்தில் வந்து கேட்கவேண்டும் என்று இருக்கிறது. (குறுக்கீடு) இல்லை. அதை என்னிடம் கொடுத்திருந்தால், அரசுக்கு என்ன பிரச்சினை என்பதைத் தெரிவிக்காமல் சொல்லமுடியாது. (குறுக்கீடு) இப்போது வேண்டாம். நீங்கள் என்னிடம் தெரிவித்துவிட்டுச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நாம் ஒரு முறையை வைத்திருக்கிறோம். ஏதாவது ஒரு பிரச்சினையை இந்தமாதிரி பேரவையில் நீங்கள் தெரிவிக்க வேண்டுமென்றால் என்னிடம் முதலில் தெரிவித்து விட்டு பிறகு இங்கே வந்து தெரிவிக்க வேண்டும் என்றிருக்கிறது. (குறுக்கீடு) நான் உங்களுக்கு அனுமதித்துவிட்டால் எல்லா உறுப்பினர்களும் இதே முறையை பின்பற்ற ஆரம்பிப்பார்கள். என்னிடம் தெரிவிக்காமல் வந்து இங்கே தெரிவிப்பது என்று ஆரம்பித்தால் சரியல்ல. (குறுக்கீடு) நீங்கள் நல்ல உறுப்பினர். தயவுசெய்து நீங்கள் உட்காரலாம். (குறுக்கீடு) பிறகு எல்லா உறுப்பினர்களும் இந்தமாதிரி ஆரம்பித்துவிடுவார்கள். (குறுக்கீடு) நாளைக்கு என்னிடம் என்ன என்று

தெரிவியுங்கள். என்னவென்றே தெரியவில்லை. எனவே நாளைக்கு என்னிடம் வந்து சொல்லுங்கள் நாளை ஒரு மணி நேரத்திற்கு முன்னர் என்னிடம் வந்து. தெரிவியுங்கள் நான் உங்களுக்கு அனுமதிக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை. தயவுசெய்து வேண்டாம். இதிலே வேறு ஒன்றும் வேண்டாம். (குறுக்கீடு) திரு. சுதர்சனம், நீங்கள் என்னிடத்தில் எதுவுமே சொல்லவே இல்லை. உட்காருங்கள்.

முற்பகல் 10-15

2. முன்பண மானியக் கோரிக்கைகள், 1993-94, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993-94 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை வைத்தல். மாண்புமிகு நிதி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கிறேன்.

கோரிக்கை.		(ரூபாய் ஆயிரத்தில்.)
	A. வருவாய்க் கணக்கில் செலவு.	
1	நில வரித் துறை ..	2,97,03
2	மாநில ஆயத் தீர்வைத் துறை ..	2,35,64
3	மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம்.	3,14,35
4	பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம்.	19,17,63
5	முத்திரைத் தாள்கள்—நிருவாகம் ..	96,02
6	பத்திரப் பதிவு ..	6,99,44
7	மாநிலச் சட்டமன்றம் ..	1,43,25
8	தேர்தல்கள் ..	1,05,78

TRUTH ALONE TRIUMPHS